தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ்கான், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்
ஆணை எண். 12/பேரூ/2022

நாள் 10.03.2022

திரு. A.R. சீனிவாசன்,
திசையன்விளை, திருநெல்வேலி மாவட்டம் ... முறையீட்டு மனுதாரர்

செயல் அலுவலர்,
திசையன்விளை பேரூராட்சி ... எதிர்மனுதாரர்

திருநெல்வேலி மாவட்டம், திசையன்விளை, நெ.45 அற்புத விநாயகர் கோவில் தெரு என்ற முகவரியைச் சேர்ந்த திரு. A.R. சீனிவாசன் என்பவரின் 28.1.2022 நாளிட்ட முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் 31.01.2022ல் பெறப்பட்டு, 12/2022 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

திருநெல்வேலி மாவட்டம், திசையன்விளை, நெ.45 அற்புத விநாயகர் கோவில் தெரு என்ற முகவரியைச் சேர்ந்த திரு. A.R. சீனிவாசன் (த/பெ. இரத்தினபாண்டி) என்பவர் அளித்துள்ள 28.1.2022 நாளிட்ட புகார் மனுவில் திசையன்விளை கிராமம் சர்வே எண்.16/2A2வில் வீட்டு உபயோகத்திலுள்ள கிணற்றின்மேல் கட்டப்பட்டுள்ள கடை (ஹோட்டல்) கட்டிடம் நில நடுக்கம், நில அதிர்வுகள் ஏற்பட்டால் கட்டிடம் 150 அடி ஆழமுள்ள பள்ளத்தில்/தண்ணீரில் மூழ்கும் அபாய நிலையில் உள்ளது குறித்தும், ஹோட்டலில் சாப்பிடவருபவர்கள் உயிர்களுக்கு உத்தரவாதம் இல்லை என்றும், சமீபத்தில் நெல்லையில் தனியார் பள்ளிக் கட்டிடம் இடிந்து மாணவர்களின் உயிர்களை பறித்துள்ளதுபோல், அனுமதி பெறாமலும், வாரிசுதாரர்கள், குடியிருப்பவர்களுக்கு கிணற்றை ஒதுக்காமலும் கட்டப்பட்டுள்ள மேற்படி கட்டிடத்தினை அகற்றுமாறு (அல்லது) சீல் வைக்க உத்தரவிடுமாறு கோரிக்கை விடுத்துள்ளார். திசையன்விளை கிராமம், சர்வே எண்.16/2A2வில் கிணற்றின்மேல் கட்டப்பட்டுள்ள கடையானது 29.4.2019ல்

திறக்கப்பட்டுள்ளதென்றும், மேற்படி கடையின் திறப்புவிழா நோட்டீஸின் நகலினையும் இணைத்தனுப்பியுள்ளார்.

திசையன்விளை சிறப்புநிலை பேரூராட்சி செயல் அலுவலர் 22.08.2019ல் ஆய்வு செய்து கட்டிட வேலை நிறுத்திவைக்கப்பட்டுள்ளதென status ல் பதிவு செய்துள்ளார் என்று குறிப்பிட்டும், செயல் அலுவலரது கடித நகலினையும் மனுதாரர் தனது புகார் மனுவுடன் இணைத்தனுப்பியுள்ளார். மேலும், பேரூராட்சிகளின் உதவி இயக்குநரால் 28.12.2020ல் இதுகுறித்து விசாரிக்கப்பட்டதென்றும், செயல் அலுவலரிடம் மூன்று அறிவிப்பு நோட்டீஸ் அனுப்பியபிறகு சட்டப்படி சீல் வைத்துவிடுங்கள் என கூறினார். ஆனால் எதிர்மனுதாரருக்கு இதுவரை அறிவிப்பு நோட்டீஸ் ஒன்று மட்டும்தான் வழங்கப்பட்டுள்ளதென்றும், திசையன்விளை பேரூராட்சி செயல் அலுவலர் இதற்கான மேல்நடவடிக்கையினை எடுக்கவில்லை என்றும், உண்மைத் தன்மை அறிந்தும் செயல்படாமல் காலதாமதம் செய்துவரும் அதிகாரிகள் மீது துறைரீதியான நடவடிக்கை எடுக்குமாறும், நெல்லையில் சமீபத்தில் தனியார் பள்ளிக் கட்டிடம் இடிந்து உயிர்பலி வாங்கியதுபோல் நடைபெறாமல் இருக்க விசாரணை செய்து மேல்நடவடிக்கை எடுத்திடுமாறும், தான் இதுகுறித்து கொரோனா காலக்கட்டத்தில் அறிமுகம் செய்யப்பட்ட வாட்ஸ் அப் எண் மூலம் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு புகார் செய்தும் நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை என்றும் தனது மனுவில் கூறப்பட்டுள்ள விவரங்கள் அனைத்தும் உண்மையென உறுதியளித்துள்ளதோடு, தனது புகார் மனுவின் மீது விசாரணை மேற்கொண்டு உரிய ஆணையினைப் பிறப்பிக்குமாறு கோரி இம்முறைமன்ற நடுவத்தில் முறையீடு செய்துள்ளார்.

2. மனுதாரர் தமது புகார் மனுவுடன் கிணற்றின் மேல் கட்டப்பட்டுவரும் கட்டட பணி நடைபெற்ற நிலையில் எடுக்கப்பட்ட புகைப்பட நகல், கிணற்றிலிருந்து வீட்டு உபயோகத்திற்கு தண்ணீர் எடுக்கப்படும் நிலையில் எடுத்துள்ள புகைப்படம் மற்றும் கிணற்றை மூடி அதன்மேல் திறக்கப்பட்டுள்ள ஊேறாட்டல் தோற்ற புகைப்படம், செயல் அலுவலர், திசையன்விளை பேரூராட்சியால் மனுதாரருக்கு தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005–ன்கீழ் வழங்கப்பட்ட கடிதம் ந.க.எண்.11/2020 நாள் 22.1.2020ன் நகல், திசையன்விளை சிறப்புநிலை பேரூராட்சியால் திரு. வி. ராம்குமார், த/பெ வெங்கடேசன், அற்புத விநாயகர் கோவில் தெரு, திசையன்விளைக்கு அனுப்பப்பட்ட நோட்டீஸ் ந.க.எண்.84/2018 நாள் 29.09.2020ன் நகல், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை மூலம் பேரூராட்சிகளின் ஆணையாளருக்கு மனுதாரரால் அனுப்பப்பட்ட புகார் மனு மீது நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அறிவுறித்தி அனுப்பப்பட்ட கடித எண்.14480/பேரூ.2/2021–1 நாள் 03.08.2021, இணை இயக்குநர், திருநெல்வேலி மாவட்ட நகர் ஊரமைப்புத் துறை மூலம் திசையன்விளை பேரூராட்சி செயல் அலுவலருக்கு மனுதாரரின் புகார் மனு மீது அரசாணை எண்.289 வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை, நாள் 16.12.2010–ன்படி நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கோரி அனுப்பப்பட்ட கடிதம் ந.க.எண்.3571/2020 நாள் 29.08.2020ன் நகல், வட்டாட்சியர் அலுவலகம், திசையன்விளை அவர்களால் வருவாய் ஆய்வாளர், குறுவட்ட அளவர் மற்றும் கிராம நிர்வாக அலுவலர், திசையன்விளை ஆகியோரை புலத்தினை விரிவான அறிக்கை செய்யுமாறு கோரி அனுப்பப்பட்ட கடித உ.1869/2020 நாள் 03.08.2021, திரு. இரத்தினபாண்டி நாடார்

அவர்களது வாரிசுதாரர்கள் விவரங்கள் குறித்து வழங்கப்பட்ட வாரிசு சான்றிதழ் நாள் 10.01.2019–ன் நகல், மாவட்ட ஆட்சியருக்கு அளிக்கப்பட்ட மனுவின் நிலை குறித்த நகல் (status). திசையன்விளை பேரூராட்சியால் திரு. மு.ஆ. இரத்தினபாண்டி என்பவர் பெயரில் செலுத்தப்பட்ட 2020–2021க்கான சொத்துவரி ரசீது நகல், இரத்தினபாண்டி நாடார் இறப்பு சான்றிதழ் மற்றும் மனுதாரரின் பிறப்பிடச் சான்றிதழ் ஆகியவற்றை தனது புகார் மனுவின் ஆதார ஆவணங்களாக இணைத்தனுப்பிவைத்துள்ளார்.

3. திசையன்விளை பேரூராட்சி செயல் அலுவலர் மற்றும் முறையீட்டு மனுதாரர் ஆகியோர் 01.03.2022 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகுமாறு இம்முறைமன்ற நடுவ 22.02.2022 நாளிட்ட அழைப்பாணைகள் ஒப்புகையுடன் கூடிய பதிவு அஞ்சல் மூலமாக அனுப்பப்பட்டன. முறையீட்டு மனுதாரர் மற்றும் திசையன்விளை பேரூராட்சி செயல் அலுவலர் 1.3.2022 அன்று திருநெல்வேலி முகாமில் நடைபெற்ற நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு வாக்குமூலம் அளித்துள்ளனர்:-

4. மனுதாரர் திரு. A.R. சீனிவாசன் அளித்துள்ள தமது வாக்குமூலத்தில் “திசையன்விளை பேரூராட்சி, சர்வே எண்.16/2A2வில் கிணற்றின் மீது கான்கிரீட் போட்டு ஒட்டல் ஒன்றை நடத்தி வருகின்றனர். கிணற்றின் மீது கட்டடம் கட்டப்பட்டுள்ளதால், அது எந்த நேரமும் இடிந்து மக்களுக்கு ஆபத்து ஏற்படலாம். திட்ட அனுமதி பெறப்படாத இக்கட்டிடம் குறித்து மாவட்ட ஆட்சியர், பேரூராட்சி செயல் அலுவலர் ஆகியோருக்கு மனுக்கள் அனுப்பியும் இதுவரை மேற்கண்ட கட்டடத்தை அகற்றுவதற்கு எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. எனவே, மேற்கண்ட கட்டடம் கட்டப்பட்டுள்ளதை ஆய்வு செய்து உரிய நடவடிக்கை எடுத்திட ஆவன செய்யுமாறு இம்முறைமன்றத்தைக் கேட்டுக்கொள்கிறேன். இது குறித்த புகைப்படங்களின் நகல்கள், மாவட்ட ஆட்சியரிடம் 2019–ல் அளிக்கப்பட்ட மனுவின் நகல் ஆகியவற்றை இம்முறைமன்றத்தில் சமர்ப்பிக்கிறேன்'' என்று தெரிவித்துள்ளார்.

5. திசையன்விளை பேரூராட்சி செயல் அலுவலர் சார்பில் அப்பேரூராட்சியில் எழுத்தராகப் பணியாற்றிவரும் திரு. அருண்லால் 1.3.2022 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி அளித்துள்ள தமது வாக்குமூலத்தில் “திசையன்விளை பேரூராட்சி, சர்வே எண்.16/2A2வில் கிணற்றின் மீது கான்கிரீட் அமைத்து ஒட்டல் நடத்தி வருவதாக மனுதாரரால் குறிப்பிட்டுள்ள இடத்திற்கு நேரடியாக சென்று அக்கட்டடம் திட்ட அனுமதி பெறப்பட்டதா என ஆய்வு மேற்கொண்டு, திட்ட அனுமதி பெறப்படாதபட்சத்தில், சட்ட விதிகளுக்குட்பட்டு உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை இம்முறைமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்” என்று தெரிவித்துள்ளார்.

6. திசையன்விளை சிறப்புநிலை பேரூராட்சி செயல் அலுவலர் மனுதாரரின் புகார் மனு குறித்து 1.3.2022 அன்றைய நேரடி விசாரணையின்போது அளித்துள்ள விளக்க அறிக்கையில் திரு. சுதாகர் பாலாஜி என்பவரின் கட்டட அனுமதி விண்ணப்பம், நாள் 13.12.2017படி சுதாகர் பாலாஜி என்பவர் சர்வே எண்.16/2A2 கட்டட அனுமதி வேண்டி விண்ணப்பித்துள்ளார் என்றும் மேற்படி இட உரிமை தொடர்பாக குடும்ப வழக்கு 267/2005 நிலுவையிலுள்ளதாக பல்வேறு தடங்கள் மனுக்கள் வரப்பெற்றன. அதன் அடிப்படையில் கட்டட அனுமதி கோரி பெறப்பட்ட விண்ணப்பம் தற்காலிகமாக பரிசீலிக்கப்படாமல்

நிலுவையில் இருந்தது. மனுதாரர் திரு. A.R. சீனிவாசன் நேரடி விசாரணையின்போது வழக்கு ஏதும் நிலுவையில் இல்லை என்று தெரிவித்தார். எனவே, கட்டட அனுமதிகோரி சமர்ப்பிக்கப்பட்டுள்ள திரு. சுதாகர் என்பவரது விண்ணப்பம் பரிசீலிக்கப்பட்டு, உரிய கட்டட விதிமுறைகளின்படி கட்டட அனுமதி வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று தெரிவித்துள்ளார்.

7. மனுதாரரின் புகார் மனு மற்றும் மனுவுடன் இணைத்தனுப்பப்பட்ட ஆவணங்கள்/ சான்றிதழ்கள், பல்வேறு காலக்கட்டங்களில் மனுதாரரால் பல்வேறு அலுவலகங்களுக்கு அளிக்கப்பட்ட புகார் மனுக்கள், புகைப்படங்கள் மற்றும் அவரது வாக்குமூலம், திசையன்விளை பேரூராட்சி செயல் அலுவலரின் சார்பில் அப்பேரூராட்சியில் எழுத்தராகப் பணியாற்றிவரும் திரு. அருண்லால் 1.3.2022 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி அளித்துள்ள வாக்குமூலம் மற்றும் திசையன்விளை பேரூராட்சி செயல் அலுவலர் மனுதாரரின் புகார் மனு குறித்து அளித்துள்ள விளக்க அறிக்கை ஆகிய அனைத்தும் இம்முறைமன்ற நடுவத்தினால் மிகக் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன. பரிசீலனையில் கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:-

- மனுதாரர் இம்முறைமன்ற நடுவத்திற்கு அளித்துள்ள 28.1.2022 நாளிட்ட புகார் மனுவில் திசையன்விளை கிராமம் சர்வே எண்.16/2A2 வில் உள்ள கிணற்றின்மேல் கட்டப்பட்டுள்ள கடை (ஹோட்டல்) கட்டிடம் நில நடுக்கம், நில அதிர்வுகள் ஏற்பட்டால் கட்டிடம் 150 அடி ஆழமுள்ள பள்ளத்தில்/தண்ணீரில் மூழ்கும் அபாய நிலையில் உள்ளது குறித்தும், ஹோட்டலில் சாப்பிடவருபவர்கள் உயிர்களுக்கு உத்தரவாதம் இல்லை என்றும், சமீபத்தில் நெல்லையில் தனியார் பள்ளிக் கட்டிடம் இடிந்து மாணவர்களின் உயிர்களை பறித்துள்ளதுபோல், அனுமதி பெறாமலும், வாரிசுதாரர்கள், குடியிருப்பவர்களுக்கு கிணற்றை ஒதுக்காமலும் கட்டப்பட்டுள்ள மேற்படி கட்டிடத்தினை அகற்றுமாறு (அல்லது) சீல் வைக்க உத்தரவிடுமாறு கோரிக்கை விடுத்துள்ளார். திசையன்விளை கிராமம், சர்வே எண்.16/2A2வில் கிணற்றின்மேல் கட்டப்பட்டுள்ள கடையானது 29.4.2019ல் திறக்கப்பட்டுள்ளதென்றும், மேற்படி கடையின் திறப்புவிழா நோட்டீஸின் நகலினையும் இணைத்தனுப்பியுள்ளார்
- திசையன்விளை பேரூராட்சி செயல் அலுவலர் தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005–ன்கீழ் மனுதாரர் கோரிய தகவல்களுக்கு அளித்துள்ள 22.1.2020 நாளிட்ட கடிதத்தில் திசையன்விளை கிராமம், சர்வே எண்.16/2A2 வில் வணிக கட்டிடத்திற்கு கட்டட அனுமதி ஏதும் பேரூராட்சி மூலம் வழங்கப்படவில்லை என்றும், கட்டட அனுமதி வழங்கப்படாததால் தீர்வை குறித்த கேள்வி எழவில்லை என்றும் பதில் வழங்கியுள்ளார்.
- மேலும், திசையன்விளை பேரூராட்சியில் மனுதாரரால் அளிக்கப்பட்ட 18.6.2020 நாளிட்ட புகார் மனுவின் அடிப்படையிலும், இதர புகார்களின் அடிப்படையிலும் திரு. வி. ராம்குமார், த/பெ. வெங்கடேசன் (ஹோட்டல் ஹைதராபாத் பிரியாணி கடை நடத்துபவர்) என்பவருக்கு வழங்கப்பட்டுள்ள 29.9.2020 நாளிட்ட அறிவிப்பில் அனுமதியின்றி செயல்படும் கடையினை உடனடியாக நிறுத்திவிடுமாறும்,

விதிமுறைகளின்படி உரிய அனுமதி பெறுமாறும், தவறும்பட்சத்தில் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் **1920** மற்றும் நடைமுறை விதிமுறைகளின்படி உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று அறிவிக்கை செய்துள்ளார்.

- நகர் ஊரமைப்புத் துறை இணை இயக்குநரிடமிருந்து திசையன்விளை பேரூராட்சி செயல் அலுவலருக்கு அனுப்பப்பட்டுள்ள **29.8.2020** நாளிட்ட கடிதத்தில் மனுதாரரின் புகார் மனு மீது அரசாணை எண்.**289** வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை, நாள் **16.12.2010**–ன்படி (அனுமதியற்ற கட்டுமானங்கள் மீது நடவடிக்கை எடுக்க பேரூராட்சிகளின் செயல் அலுவலர்களுக்கு அதிகாரப் பகிர்வு வழங்கப்பட்டது) நடவடிக்கை மேற்கொண்டு அதன் விவரத்தினை மனுதாரருக்கும், நகர் ஊரமைப்புத் துறை அலுவலகம், திருநெல்வேலிக்கும் தெரிவிக்குமாறு கேட்டுக்கொண்டுள்ளார்.

- மனுதாரரால் திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அனுப்பப்பட்டுள்ள **18.6.2020** நாளிட்ட மனுவில் எடுத்துரைக்கப்பட்டுள்ள புகார் விவரங்கள் வருமாறு:-

Following are some of the safety, legal and statutory concerns of the Commercial building "Hotel Hyderabad Biryani" operational at Tisaiyanvillai village survey No.16/2A2. This property at Tisaiyanvillai village has not been partitioned as on date and the ownership belongs to following 9 members as mentioned in Legal Heir Certificate No. TN-7201812261682 dated 10$^{th}$ January 2019. Groundwater well and overhead tank, bathroom, being used to residential purpose use has been demolished unlawfully without the written consent of all legal heir members and without taking permission from the Executive officer, Tisaiyanvillai Town Panchayat. The unapproved individual commercial building is being constructed above the groundwater well without closing it completely and it is unsafe, dangerous in condition, which are likely to fall and cause damage to any person occupying, resorting to or passing by such building or structures or any other structure or place in the neighbourhood. An illegal electrical line tapped from individual residential building consumer No.072-008-815 (Mr. Vengatesan) to individual commercial building line is dangerously hanging between two individual building without any safety and it is likely to cause fire hazard. This commercial building is being illegally constructed by Mr. Ram Rathinam, son of Vengatesan, residing at 4-131 Kamaraj Nagar, Novalady Road, Appuvilai, Tisaiyanvillai, without any statutory approval from the E.O Tisaiyanvillai Town Panchayat and written consent letter from all the members in the legal heir certificate to demolish the groundwater well, overhead water tank, bathroom and to construct the new commercial building. Several petitions were issued to E.O., Tisaiyanvillai Town Panchayat. The petitioner has requested for inspection to check the illegal/unauthorized/unapproved commercial building (Hotel Hyderabad Biryani) and to take necessary action under the

Tamil Nadu Town and Country Planning Act 1971 as amended by Act 61 of 2008 with immediate effect to ensure the safety of unapproved building being constructed above the groundwater well and to restore the land to its actual condition without any further delay.

- மனுதாரர் தனது புகார் குறித்து பல்வேறு காலக்கட்டங்களில் பல்வேறு துறைகளுக்கு மனு அளித்துள்ளது அவரது ஆதார ஆவணங்களிலிருந்து தெளிவாக அறியமுடிகிறது

- திசையன்விளை பேரூராட்சி சார்பில் ஆஜரான எழுத்தர் திரு. அருண்லால் என்பவர் அளித்துள்ள வாக்குமூலத்தில் மனுதாரர் குறிப்பிட்டுள்ள இடத்திற்கு நேரடியாகச் சென்று அக்கட்டடம் திட்ட அனுமதி பெறப்பட்டதா என ஆய்வு மேற்கொண்டு திட்ட அனுமதி பெறப்படாத பட்சத்தில், சட்ட விதிகளுக்கு உட்பட்டு உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்துள்ளார். இது கண்கெட்ட பின்னர் சூரிய நமஸ்காரம் செய்வதற்கொப்பாகும். இதனை இம்முறைமன்ற நடுவம் ஏற்க இயலாது. உரிய அனுமதியின்றி கட்டடம் கட்டப்பட்டு அது குறித்து பல்வேறு புகார்கள் தொடர்ந்து பல்வேறு தரப்பிலிருந்து பெறப்பட்டு, கட்டிட அனுமதியின்றி கட்டப்பட்டு வந்த கட்டிட வேலைகளை உடனே நிறுத்திடுமாறும், பேரூராட்சியில் உரிய அனுமதி பெற்று கட்டிடம் கட்டிக்கொள்ளுமாறு கட்டிட கட்டுமான வேலைகள் நடைபெற்ற நிலையில் அறிவிப்பு ஒன்றை மட்டும் அளித்துவிட்டு, கண்டும் காணாமல் இருந்துள்ளது ஏதோ உள்நோக்கத்துடன் பேரூராட்சி நிர்வாகம் இருந்துள்ளது மிகவும் கண்டிக்கத்தக்கது.

- மேலும், மனுதாரர் தனது கோரிக்கை குறித்து பல ஆண்டுகளாக போராடி வரும் நிலையில், திசையன்விளை பேரூராட்சி செயல் அலுவலர் அளித்துள்ள விளக்க அறிக்கையின்படி திரு. சுதாகர் பாலாஜி என்பவரால் 13.12.2017ல் அளிக்கப்பட்ட கட்டட அனுமதி விண்ணப்பத்தினை உரிய கட்டிட விதிமுறைகளின்படி பரிசீலித்து கட்டிட அனுமதி வழங்கிட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று தற்போது தெரிவித்துள்ளது மிகவும் நகைப்புக்குரியதாக உள்ளது. முறையற்ற கட்டுமானம் மேற்கொள்ளப்பட்டு, பாகம் பிரிக்காமல் உள்ள சொத்தில் உள்ள பொதுக்கிணற்றை மூடி, வணிக ரீதியிலான ஃேஉறாட்டல் மேற்படி சொத்தில் கட்டப்பட்டு 2019ல் திறக்கப்பட்டு இயங்கி வரும் நிலையில், செயல் அலுவலரின் அறிக்கை அவரது கடமை தவறிய செயலினையும், பணியில் அவர் காட்டிவரும் அக்கறையினையும் பறைசாற்றியுள்ளதோடு, இம்முறைமன்ற நடுவத்தின் கவனத்தினை திசை திருப்புவதற்காக குடும்ப வழக்கு 267/2005 நிலுவையில் இருந்ததால், தற்காலிகமாக பரிசீலிக்கப்படாமல் நிலுவையில் இருந்ததாக குறிப்பிட்டுள்ளது மிகவும் கண்டிக்கத்தக்கது. அதுவும் மனுதாரர் வழக்கு ஏதும் நிலுவையில் இல்லை என்று தெரிவித்துள்ளதன் அடிப்படையில், பரிசீலிக்கப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் குறிப்பிட்டுள்ளது அதனிலும் வேடிக்கையானது. வழக்கு நிலுவையில் உள்ளது குறித்து மனுதாரருக்கு பேரூராட்சியால் பதில் வழங்கப்பட்டுள்ளதாக ஆவணங்கள் ஏதும் சமர்ப்பிக்கப்படவில்லை.

- (லேட்) இரத்தினபாண்டி என்பவரது வாரிசு சான்றின்படி மனுதாரர் அவரது மகன் என்பதும், வாரிசுதாரர்களிடையே பாகம் பிரிக்கப்படாமல் உள்ள சொத்தில் (லேட்) இரத்தினபாண்டி மகனும் காலஞ்சென்ற திரு. வெங்கடேசன் என்பவரது மகனுமான திரு. வி. ராம்குமார் மேற்படி சொத்தில் பொதுவாக உபயோகத்திலிருந்த பொதுக் கிணற்றை மூடிவிட்டு, உரிய அனுமதியின்றியும், சட்டத்திற்கு புறம்பாகவும் கட்டுமானங்களை மேற்கொண்டு அதில் பாதுகாப்பற்ற முறையில் கட்டடம் கட்டி ஹோட்டல் திறந்துள்ள நிலையில், ஆக்கிரமிப்பு செய்து கட்டப்பட்டுள்ள கட்டுமானத்தை தாமாக நிறுத்திடுமாறும், தவறும்பட்சத்தில் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 மற்றும் நடப்பிலுள்ள விதிமுறைகளின்படி நடவடிக்கை மேற்கொள்ள ஏதுவாகுமென 29.09.2020ல் அறிவிப்பினை திசையன்விளை சிறப்புநிலை பேரூராட்சி செயல் அலுவலர் அனுப்பிவிட்டு, அதன் பின்னர் அதன் மீது உரிய தொடர் நடவடிக்கையினை மேற்கொள்ளாமலும், அனுமதியற்ற கட்டிடம் கட்டப்பட்டு அதில் வணிக ரீதியில் ஹோட்டல் நடத்திவருவது தெரிந்திருந்தும், இதுவரை அதன் மீது நடவடிக்கை எடுக்காததை இம்முறைமன்ற நடுவம் வன்மையான கண்டிக்கிறது. இதற்கு முன் 4.9.2018 மற்றும் 25.1.2019ல் அறிவிக்கை செய்யப்பட்டதாக மட்டும் குறிப்பிடப்பட்டுள்ளது.

- உரிய அனுமதியின்றி கட்டி முடித்து உணவு விடுதி இயங்கி வருவதால் பேரூராட்சிக்கு முறையாக செலுத்தப்படவேண்டிய கட்டட அனுமதி, வளர்ச்சிக் கட்டணங்கள், வரி வருவாய் ஆகியவற்றை செலுத்தாமல் பேரூராட்சிக்குட்பட்ட பகுதியில் தனியர் கட்டுமானங்களை எழுப்பியுள்ளது பேரூராட்சியின் மெத்தனப்போக்கினையும், பேரூராட்சி நிர்வாகத்தின் மீது மக்கள் வைத்துள்ள நம்பிக்கையின்மையை/அலட்சியத்தையுமே எடுத்துக்காட்டியுள்ளதாகவே இம்முறைமன்ற நடுவம் கருதுகிறது.

- மனுதாரரின் புகார் மனு குறித்து ஆய்வு மேற்கொண்ட மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர், மூன்று அறிவிப்பு கொடுத்து அதன்பின் சட்டப்படி கட்டிடத்திற்கு சீல் வைத்திடுமாறு திசையன்விளை பேரூராட்சி செயல் அலுவலருக்கு அறிவுறுத்திய பின்னரும், பெயரளவிற்கு ஒரு அறிவிப்பினை மட்டுமே கொடுத்துவிட்டு, அதன்பின் செயல்படாமல் திசையன்விளை பேரூராட்சி நிர்வாகம் இருந்துள்ள செயல் வேண்டுமென்றே ஏதோ உள் நோக்கத்துடன் கட்டடம் கட்டி முடிக்கப்படும் வரை இருந்துள்ளதை இம்முறைமன்ற நடுவம் மிகவும் வன்மையாக கண்டிக்கிறது.
- மக்களின் பாதுகாப்பிற்கும், மக்களின் இன்றியமையாத தேவைகளுக்கு பங்கம் விளைவிக்கக்கூடிய செயல்களை தடுத்து அவர்களின் பாதுகாவலனாக இருக்கவேண்டிய பேரூராட்சி நிர்வாகம் இதுபோன்று தனி ஒருவருக்கு ஆதரவாக இருந்துள்ளது சட்டப்படி செயலாற்ற வேண்டிய செயல் அலுவலர், சட்டத்தை தன் கையில் வைத்துக்கொண்டு பாதுகாப்பளித்துள்ளது வேலியே பயிரை மேய்ந்ததற்கொப்பாகும்.

- முறையற்ற கட்டுமானங்களை அகற்றிடுவதற்கு பேரூராட்சி செயல் அலுவலர்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளதை சுட்டிக்காட்டி, அதன் அடிப்படையில் மனுதாரரின் புகார் மனு மீது நடவடிக்கை மேற்கொண்டு,

எடுக்கப்பட்ட நடவடிக்கையின் விவரத்தினை மனுதாரருக்கு தெரிவிக்குமாறும், நகர் ஊரமைப்பு அலுவலகம், திருநெல்வேலிக்கும் தெரிவிக்குமாறு உதவி இயக்குநர் (பேரூராட்சிகள்), திருநெல்வேலி மண்டலம் அவர்களுக்கு நகர் ஊரமைப்பு இணை இயக்குநர், திருநெல்வேலியால் 29.3.2021ல் அறிவுறுத்தி தெரிவிக்கப்பட்டதற்கு பின்னரும், மனுதாரரது புகாரின் மீது பேரூராட்சி நிர்வாகம் மெத்தனமாக இருந்துள்ளது தெளிவாகிறது. மேலும் இம்முறைமன்ற நடுவத்திற்கும் ஒரு தெளிவான முழுமையான அறிக்கையையும் சமர்ப்பிக்கத் தவறியுள்ளது.

- அபாயகரமான கட்டிடங்கள் இடிந்து அதனால் மக்களின் உயிர் பறிக்கப்பட்டுள்ளதையும், சமீபத்தில் தனியார் பள்ளிக்கூட கழிவறை சுவர் இடிந்துவிழுந்து மாணவர்களின் உயிர்களை பறித்துள்ளதையும் சுட்டிக்காட்டி, அதன் செய்தி மற்றும் புகைப்படத்தினை புகார் மனுவுடன் இணைத்தனுப்பியபின்னரும் இதுபோன்ற நேர்வுகளில் கடமையை ஆற்றிடத் தவறிய அலுவலர்களின் அலட்சியத்தினை அனுமதித்திட இயலாது. பாதுகாப்பு குறித்து முறையாக ஆய்வு மேற்கொண்டு கட்டடம் கட்டப்பட்டுள்ளது என்பதற்கான ஆதாரம் ஏதுமின்றி, உரிய அனுமதி பெறாமலும் எழுப்பப்பட்டுள்ள இதுபோன்ற கட்டுமானங்களை அகற்றிட இன்னமும் விழிப்புணர்வு காட்டாமல் இருந்துள்ள நிகழ்வு கட்டிட உரிமையாளரின் அசாதாரண போக்கையும், பேரூராட்சி நிர்வாகத்தில் எதையும் சரிகட்டிடலாம் என்ற அலட்சியத்தையும் இந்நேர்வு எடுத்துரைக்கிறது.

8. மேற்குறிப்பிடப்பட்டுள்ள சூழ்நிலையில், மனுதாரர் திரு. A.R. சீனிவாசன் என்பவரது புகார் மனு மீது திருநெல்வேலி மாவட்டம், திசையன்விளை பேரூராட்சி குறித்த காலத்திற்குள் நடவடிக்கை எடுக்காத காரணத்தினால், திசையன்விளை பேரூராட்சி புல எண்.16/2A2ல் முன்னனுமதி இன்றி, சட்டத்திற்கு புறம்பாக பொதுக் கிணற்றினை மூடி அதன் மீது பாதுகாப்பிற்கு கேள்விக்குறியாக உள்ள கட்டுமானத்தில், ஷேறாட்டல் ஹைதராபாத் பிரியாணி என்ற வணிக ரீதியிலான கட்டிடம் கட்டப்பட்டு 29.4.2019 முதல் இயங்கிவருவதை கண்டும் காணாமல், பெயரளவிற்கு அறிவிப்பினை மட்டுமே கொடுத்துவிட்டு மிகவும் அலட்சியமாக இருந்துள்ளதற்கு பொறுப்பான திசையன்விளை பேரூராட்சி செயல் அலுவலர்கள், சம்மந்தப்பட்ட பணியாளர்கள் மற்றும் பேரூராட்சி உதவி இயக்குநர் ஆகியோர் மீது உரிய விதிகளின் கீழ் ஒழுங்கு நடவடிக்கை மேற்கொண்டு கடுமையான தண்டனைகளை வழங்கிடுமாறு பேரூராட்சிகளின் ஆணையாளருக்கு பரிந்துரைத்து இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது. மேலும், உரிய அனுமதியின்றி, பாதுகாப்பிற்கு உத்தரவாதமின்றி பொதுமக்கள் வருகைதரும் மேற்படி ஷேறாட்டல் முறைகேடாக கட்டப்பட்டு அபாயகரமான மின்னிணைப்பினையும் அளித்துள்ளதாக மனுதாரர் தனது புகாரில் குறிப்பிட்டுள்ளதால், அக்கட்டிடத்தினை நேரடியாக கள ஆய்வு மேற்கொண்டு உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு திருநெல்வேலி மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார். ஏதாவது விபத்தோ அல்லது இழப்போ ஏற்படின் முறைகேடாகக் கட்டி, ஒப்புதல் அனுமதியின்றி நடந்துவரும் உணவு விடுதி மீது விதிகளின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்கத் தவறிய திசையன்விளை பேரூராட்சியின் செயல் அலுவலர் மற்றும் திருநெல்வேலி மண்டல பேரூராட்சிகளின் உதவி

இயக்குநர் ஆகியோரே பொறுப்பாவர் என்று தெரிவிக்கப்படுகிறது. திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவர் இதனை கண்காணித்து நடவடிக்கை எடுக்க அறிவுறுத்தப்படுகிறார்.

2022ஆம் ஆண்டு, மார்ச் திங்கள் 10–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

(ஒம்)/- x x x x x
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்
திரு. A.R. சீனிவாசன்,
த/பெ (லேட்) இரத்தினபாண்டி நாடார்,
A2/45 அற்புத விநாயகர் கோவில் தெரு,
திசையன்விளை, திருநெல்வேலி மாவட்டம்–627 657.
செயல் அலுவலர்,
திசையன்விளை சிறப்புநிலை பேரூராட்சி,
திசையன்விளை, திருநெல்வேலி மாவட்டம்–627 657.

மாவட்ட ஆட்சித் தலைவர், திருநெல்வேலி மாவட்டம், திருநெல்வேலி.

பேரூராட்சிகளின் மண்டல உதவி இயக்குநர்,
திருநெல்வேலி மண்டலம், திருநெல்வேலி

பேரூராட்சிகளின் ஆணையாளர், பேரூராட்சிகளின் ஆணையரகம்,
நகர் நிர்வாக அலுவலகம், ராஜா அண்ணாமலைபுரம், எம்.ஆர்.சி நகர், சென்னை–28

இணை இயக்குநர் (பொது) மற்றும் ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer)
பேரூராட்சிகளின் ஆணையாளர் அலுவலகம், நகர் நிர்வாக அலுவலகம்,
இராஜா அண்ணாமலைபுரம், சென்னை–600 028. (பெயரிடப்பட்ட உறையில்)
நகல்: மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களின் தனிச் செயலர்
இ.கோ/உதிரி

–/ஆணைப்படி/அனுப்பப்படுகிறது/–

செயலாளர்